

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (1.1.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி கருணாநிதி, கலாநிதி வீராசாமி, து. மு. கதிர் ஆனந்த், தே. மலையரசன், அருண் நேரு ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (1.1.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### கண்ணாடி நடை பாலம் அ.தி.மு.க.வின் திட்டம் என்று

# எடப்பாடி பழனிசாமி தவறான கருத்தைச் சொல்வதா?

## அமைச்சர் எ.வ.வேலு கண்டனம்!

நாகர்கோவில், ஜன. 2 -

‘கன்னியாகுமரியில் உள்ள கண்ணாடி நடை பாலம் அ.தி.மு.க.வின் திட்டம் என்று எடப்பாடி பழனிசாமி தவறான கருத்தை சொல்கிறார் என்று அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கூறினார்.

கன்னியாகுமரியில் நேற்று முன்தினம் பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ. வேலு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறிய தாவது:

கன்னியாகுமரி கடலில் நடுவே புதிதாக அமைக்கப்பட்ட கண்ணாடி நடை பாலம் அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டம் என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அவர் முன்னாள் அதிகாரிகளின் கருத்தை கேட்டுக் கொண்டு தவறான கருத்தை சொல்கிறார். இதேபோல் பல அறிவிப்புகளை அவர் வெளியிட்டுள்ளார்.

முதன்முதலில் இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்த அரசாணை யாரும் வெளியிடவில்லை. மேலும் இந்த திட்டம் கைவிடபட்டது. தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு ஒப்பந்தம் விடப்பட்டு கன்னியாகுமரி கடலில் நடுவே கண்ணாடி நடை பாலம் கட்டப் பட்டுள்ளது. பாலம் அமைப்பது தொடர்பாக பலமுறை இங்கு நானும், என்னுடன் பல அமைச்சர்களும், அதிகாரிகளும் ஆய்வு நடத்தி இருக் கிறோம்.



திட்டங்கள் குறித்த அறிவிப்பு யார் வேண்டுமானாலும் கூறலாம். ஆனால் அதற்கான மதிப்பீடு தொகை ஒதுக்குவது, பணிகளை தொடங்குவது, ஒப்பந்தம், ஆய்வு போன்றவற்றை தி.மு.க. அரசு நிறைவேற்றி உள்ளது. அவரது இருப்பிடத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக எடப்பாடி பழனிசாமி அன்றாடம் இது போன்று பேசுகிறார். அவை அனைத்தும் உண்மை அல்ல. தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி யில் சட்ட ஒழுங்கு பாதுகாப்பாக உள்ளது. குற்ற வழக்குகளில் யாரையும் காப்பாற்றும் நோக்கில் அரசு செயல்படவில்லை. எங்களை குறை கூறுபவர்கள் அவர்களது ஆட்சியில் சட்ட ஒழுங்கு மிக மோசமாக இருந்தது என் பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தி.மு.க. ஆட்சியில் தமிழக மக்கள் மகிழ்ச்சியாக உள்ளனர். சிலர் அரசியல் ஆதாயத் துக்காக பொய்களை சொல்லி வருகிறார்கள். அது தமிழக மக்களிடம் எடுபடாது.

இவர் அவர் அமைச்சர் எ.வ. வேலு பேட்டியளித்தார்.

### தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில்

# நெல்லை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி கூட்டம்!

## அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா சிறப்புரை!

நெல்லை, ஜன.2-

தி.மு.க.தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் நெல்லை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி ஆய்வுக்கூட்டம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் பாளை அன்னை மகாலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தி.மு.க.தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்றார்.

பின்னர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

தி.மு.க.வின் தகவல் தொழில்நுட்ப அணி வரும் ஆண்டின் முதல் மூன்று மாதத்திற்குள் மிகப்பெரிய பரிமாண வளர்ச்சியை அடைய உள்ளது. லட்சக்கணக்கான இளைஞர்களை கழகத்தின் ஐடி வங்கியில் சேர்க்க உள்ளோம்.மத்திய அரசின் மிகப்பெரிய அறிவியல் ஆய்வு நடத்தும் நிறுவனமான அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் (சி.எஸ்.ஐ.ஆர்.) மூலம் புதிய ஆராய்ச்சிகள் புதிய முயற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. திருவனந்தபுரத்தில் உள்ள சி.எஸ்.ஐ. ஆர்.நிறுவனத்தை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டோம். அங்கு மிகப் பெரிய ஆராய்ச்சிகள் தற்போது நடந்து வருகிறது. தமிழகத்திற்கு மிகப்பெரிய திட்டங்களையும் புதிய ஆராய்ச்சிகளையும் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில் அதிகாரிகளுடன் சென்று அங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் உலகின் தலைமையகமாக தமிழகத்தை மாற்ற வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொண்டு வருகிறார்கள்.சி.எஸ்.ஐ. ஆர். நிறுவனத்தை தமிழகத்தில் தொடங்குவதற்கான பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.

சிப்காட் நிறுவனத்தின் மூலம் அதற்கான இடம் வழங்கப்பட உள்ளது அந்த நிறுவனம் தொடங்குவதற்கான அறிவிப்பு முதலமைச்சர் அவர்களால் விரைவில் வெளியிடப்படும்.தமிழகம் எங்கும் மிகப்பெரிய வளர்ச்சியை தமிழக முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து சேர்த்துள்ளார்கள்.தென்தமிழகம் மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் வின் பாஸ்ட் நிறுவனம் கொண்டுவரப்பட்டுள்ளது நெல்லை மாவட்டம் கங்கைகொண்டானில் டாடா,சோலார் போன்ற நிறுவனங்கள் வந்துள்ளது. இன்னும் பல நிறுவனங்கள் தமிழகத்திற்கு வரவுள்ளது. நாங்குநேரி பகுதிக்கு மிகப் பெரிய விடியலை தர வேண்டும் என தொடர் முயற்சிகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாங்குநேரி பொருளாதார மண்டலத்தில் தொழில் நிறுவனங்கள் கொண்டு வருவதற்கான சட்ட சிக்கல்கள் ஒன்றிய அரசிடம் உள்ளது.

இரண்டு வாரத்திற்கு ஒருமுறை டெல்லிக்கு சென்று அந்த பிரச்சினையை முடிப்பதற்கான பணிகளை தொழில்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் மிகப்பெரிய வளர்ச்சியை கொண்டு வருவதற்கு தி.மு.க.அரசு நிச்சயம் உதவி செய்யும் அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

